# அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (FAQ க்கள்)
# பள்ளிப் பெருந்தொற்று EBT (P-EBT) குறித்து

*கல்வி ஆண்டு 2022-2023 க்கு (ஜனவரி 4, 2023)*

---

**கேள்வி 1: P-EBT என்றால் என்ன?**
**பதில்**: இது பள்ளி மூடப்பட்டு இருப்பதாலும், பள்ளிக்கு வருகை தராமல் இருப்பதாலும் COVID-19 மூலம் பாதிக்கப்பட்டுள்ள குடும்பத்தினருக்கு உதவுவதற்காக மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட தற்காலிக உணவுப் பலனாகும் .

---

**கேள்வி 2: இந்த P-EBT பலன்களுக்குத் தகுதியுடையவர்கள் யார்?**
**பதில்:** தேசியப் பள்ளி மதிய உணவுத் திட்டத்தின் கீழ் பள்ளியில் இலவச அல்லது விலை குறைக்கப்பட்ட உணவை வழக்கமாகப் பெறுகின்ற மாணவர்களைக் கொண்ட, வெர்மோன்ட்டைச் சேர்ந்த குடும்பத்தினர் (இந்தக் கல்வி ஆண்டிற்கு உலகளாவிய பள்ளி உணவு குறித்த கேள்வி 3 ஐயும் காணவும்). பின்வரும் சூழ்நிலைகளில் ஒரு மாதத்திற்கான பலன்கள் கிடைக்கும்:

- அந்த மாணவருக்கு அந்த மாதத்தின் போது COVID காரணமாக வராமலிருந்தது தொடர்பாக விடுப்பு அளிக்கப்பட்டுள்ளது, **மற்றும்**
- P-EBT க்கு அந்த மாணவரின் பள்ளி தகுதி பெற்றுள்ளது. *P-EBT க்கு ஒரு பள்ளி எவ்வாறு தகுதி பெறுகிறது என்பதைத் தெரிந்துகொள்ள, மாகாணத் திட்டத்தைப் பார்க்கவும்:* https://dcf.vermont.gov/esd/P-EBT.

---

**கேள்வி 3: வெர்மோன்ட்டில் உலகளாவிய பள்ளி உணவு பற்றிய விவரங்கள் என்ன? இது P-EBT தகுதியைப் பாதிக்குமா?**
**பதில்:** வெர்மோன்ட்டில் உள்ள அனைத்து அரசுப் பள்ளிகள் மற்றும் சில தனியார் பள்ளிகளுக்கு உலகளாவிய பள்ளி உணவுக்கு மாகாண நிதியளிப்பதற்கு, வெர்மோன்ட் சட்டசபை சட்டம் 151 (2022) என்ற சட்டத்தை இயற்றியுள்ளது. அதாவது, வெர்மோன்ட்டில் உள்ள அனைத்து அரசுப் பள்ளிகளும், சில தனியார் பள்ளிகளும் கல்வி ஆண்டு 2022-2023 இல் பள்ளி மதிய உணவுத் திட்டத்தில் கலந்து கொண்டு, CEP அல்லது விதி 2 ஐ செயல்படுத்துகின்றன. ஒவ்வொரு பள்ளியும் தகுதியடைந்தவுடன்

(மேலேயுள்ள கேள்வி 2 ஐப் பார்க்கவும்), அந்தப் பள்ளிகளில் COVID காரணமாகப் பள்ளியைத் தவற விட்ட மாணவர்கள் அனைவரும் அவர்கள் தவற விட்ட நாட்களுக்கு P-EBT பலனைப் பெறுவார்கள். தேசியப் பள்ளி மதிய உணவுத் திட்டத்தில் பங்கேற்கும் மற்றும் பள்ளி உணவுக்கு குடும்பத்தினரிடம் கட்டணம் வசூலிக்கும் தனியார் பள்ளிகளில், மாணவர்கள் இலவச அல்லது விலை குறைக்கப்பட்ட உணவைப் பெறுவதற்குத் தகுதி பெற்றால் மட்டுமே அவர்கள் இந்தப் பலனைப் பெறுவார்கள்.

---

**கேள்வி 4: COVID காரணமாக வராமலிருந்தது தொடர்பாக விடுப்பு அளிக்கப்பட்டதாகத் தகுதியடைவது எது?**

**பதில்:** COVID காரணமாக வராமலிருந்தது என்றால், பின்வரும் எந்தவொரு  காரணத்திற்காகவும் விடுப்பு அளிக்கப்பட்டு வராமல் இருந்ததைக் குறிக்கும்:

- COVID பாசிட்டிவ் அல்லது அனுமானிக்கப்பட்ட COVID நோய்,
- COVID பாசிட்டிவ் நபருடன் நெருக்கமாக இருந்ததாக அடையாளம் காணப்படுவது
- தனிமைப்படுத்தல் மற்றும்/அல்லது COVID பரிசோதனை மேற்கொள்ள வேண்டிய தேவையைக் குறிக்கும் COVID அறிகுறிகள், அல்லது
- திட்டமிடப்படாத வகுப்பறை, வகுப்பு அல்லது பள்ளி மூடப்படுதல், அல்லது COVID காரணமாக தொலைநிலைக் கற்றலுக்கு மாறுதல், பாசிட்டிவ் நபர்கள் உட்பட COVID காரணமாக ஆசிரியர்கள் பற்றாக்குறை, தொடர்பு-கண்டறிதலை நடத்த வேண்டிய அவசியம் போன்றவை.
- COVID காரணமாக வராமலிருந்தது பற்றிய மேலும் விரிவான விவரங்களுக்கு, பார்க்கவும் [https://education.vermont.gov/documents/definition-of-covid19-related-absences-for-purposes-of-issuing-pebt-benefits](https://education.vermont.gov/documents/definition-of-covid19-related-absences-for-purposes-of-issuing-pebt-benefits)

---

**கேள்வி 5: பனி அதிகமாக இருப்பதால் அல்லது தண்ணீர் குழாய் உடைந்ததால் அல்லது வெப்பப்படுத்தும் அமைப்பு உடைந்ததால் எங்கள் பள்ளி மூடப்பட்டிருந்தது.  தவறிய அந்த நாட்களுக்காக P-EBT க்கு மாணவர்கள் தகுதி பெறுவார்களா?**

**பதில்:** இல்லை, COVID தொடர்புடைய காரணத்திற்காக பள்ளிகள் மூடப்படுவது மட்டுமே கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.

---

**கேள்வி6: எனது குடும்பத்தார் தகுதியுடையவர்களா என எப்படி நான் கண்டறிவது?**

**பதில்:** வெர்மோன்ட் மாகாண அரசு வழங்கியுள்ள அளவுருக்களின் அடிப்படையில், உங்கள் மாணவர் தகுதியுடையவரா என்பதை உங்கள் மாணவரின் பள்ளி தீர்மானிக்கும். கோப்பில் சரியான விவரங்களைப் பெற்றுள்ளனரா என உறுதிப்படுத்துவதற்கு, பள்ளி உங்களைத் தொடர்பு கொள்ளலாம். அவர்களின் கோரிக்கைக்குப் பதிலளிக்கவும். நீங்கள் தகுதியுடையவராக இருந்தால், குழந்தைகள் மற்றும் குடும்பத்தினருக்கான துறையிடம் (DCF) இருந்து இந்தப் பலனை எப்படி மற்றும் எப்போது நீங்கள் பெறுவீர்கள் என்பதை விவரிக்கின்ற ஒரு கடிதத்தைப் பெறுவீர்கள்.

---

**கேள்வி 7: கடந்த கல்வி ஆண்டில் (2021-22) நான் ஒரு P-EBT அட்டையைப் பெற்றேன், ஆனால் இப்போது அது இல்லை. அதனால் ஏதாவது சிக்கலா?**

**பதில்:** .DCF உங்களுக்கு மாற்று அட்டையை அனுப்பலாம். ஏப்ரல், 2023 இல் அனுப்பப்படும் பலன் அறிவிப்புக் கடிதங்களில் வழிகாட்டுதல்கள் சேர்க்கப்பட்டிருக்கும். உங்களுக்குப் புதிய அட்டை கிடைத்தால், அதை வைத்திருக்கவும். இந்தக் கல்வி ஆண்டு பணம் வழங்கல்களில் ஒன்றுக்கு மேற்பட்ட சுற்றுக்கள் இருக்கும் என்பதால் அதில் கூடுதல் பலன்கள் சேர்க்கப்படலாம்.

---

**கேள்வி 8: பலன்கள் எப்போது வழங்கப்படும்?**

**பதில்:** *செப்டம்பர் 2022 முதல் ஜனவரி 2023* க்கான முதல் சுற்றுப் பலன்கள் ஏப்ரல் 2023 இல் வழங்கப்படும். *பிப்ரவரி 2023 முதல் ஜூன் 2023* க்கான பலன்களை ஆகஸ்ட் 2023 இல் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் துல்லியமான விவரங்களுக்கு DCF இணையதளத்தில் புதுப்பிக்கப்பட்ட FAQ க்களைத் தொடர்ந்து சரிபார்க்கவும்: https://dcf.vermont.gov/esd/P-EBT. இந்தக் கல்வி ஆண்டின் போது மத்திய COVID-19 பொதுச் சுகாதார அவசரநிலை முடிவடைந்து விட்டால், இந்தக் கல்வி ஆண்டில் P-EBT பலன்களை மத்திய அரசு நிறுத்தி விடும் என்பதைக் கவனத்தில் கொள்ளவும். அந்தச் சூழ்நிலையில், இறுதியாக

P-EBT கிடைக்கும் மாதத்தைக் குறிப்பிடுவதற்கு இந்த FAQ க்கள் புதுப்பிக்கப்படும்.

---

**கேள்வி 9: P-EBT பலன்கள் எவ்வளவு?**
**பதில்:** COVID காரணமாக வராமலிருந்தது தொடர்பாக விடுப்பு அளிக்கப்பட்ட ஒவ்வொரு நாளுக்கும் P-EBT பலன் $8.18 ஆகும்.

---

**கேள்வி10: குடும்பத்தில் எத்தனை குழந்தைகள் இருந்தாலும் P-EBT பலன் ஒன்றாகத் தான் இருக்குமா?**
**பதில்:** ஒவ்வொரு மாணவருக்கும், ஒவ்வொரு மாதமும் COVID காரணமாக வராமலிருந்தது தொடர்பாக விடுப்பு அளிக்கப்பட்ட நாட்களின் எண்ணிக்கை அடிப்படையில் தனித்தனியாக மாதாந்திரப் பலன்கள் வழங்கப்படும். குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு குழந்தையும் P-EBT க்கு தகுதியடைந்துள்ள ஒவ்வொரு மாதத்தின் நாட்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் வெவ்வேறு பலன்களைக் குடும்பத்தினர் பெறுவார்கள்.

---

**கேள்வி 11: எனது மாணவர்களின் பாதுகாப்பு இரண்டு குடும்பத்தினர் மத்தியில் பிரிக்கப்பட்டுள்ளது. பலன் யாருக்குக் கிடைக்கும்?**
**பதில்:** மாணவரின் பள்ளியில் "குடும்பத் தலைவர்" எனப் பட்டியலிடப்பட்டுள்ள வயது வந்த நபருக்கு பலன்கள் அனுப்பப்படும். இது அந்த மாணவருக்காக இலவச அல்லது விலை குறைக்கப்பட்ட உணவிற்கு விண்ணப்பித்துள்ள வயது வந்த நபராக அல்லது பள்ளியின் கணினியில் முதன்மைத் தொடர்பாகப் பட்டியலிடப்பட்டுள்ள வயது வந்த நபராக இருக்கலாம். "குடும்பத் தலைவராக" யாரைப் பட்டியலிட வேண்டும் என்பதை உறுதிப்படுத்துவதற்கு, பள்ளிகள் குடும்பத்தினரைத் தொடர்பு கொள்ளும். "குடும்பத் தலைவரை" புதுப்பிக்க வேண்டும் என்றால் பள்ளியைத் தொடர்பு கொள்ளவும்.

---

**கேள்வி 12: இந்தப் பலனைக் கொண்டு நான் என்ன வாங்கலாம்?**
**பதில்:** உங்கள் P-EBT பலனைக் கொண்டு நீங்கள் வாங்கக் கூடிய உணவுப் பொருட்களை USDA இணையதளத்தில் பார்க்கவும்: https://www.fns.usda.gov/snap/eligible-food-items.

**கேள்வி 13: எனது P-EBT அட்டையை நான் எங்கு பயன்படுத்தலாம்?**
**பதில்:** 3SquaresVT ஐ ஏற்றுக் கொள்ளும் எந்த இடத்திலும் தகுதியுடைய உணவுப் பொருட்களை வாங்குவதற்கு அதை நீங்கள் பயன்படுத்தலாம். அதில் வெர்மோன்ட்டில் உள்ள மளிகைக் கடைகள், பல்பொருள் அங்காடிகள், கன்வீனியன்ஸ் கடைகள் மற்றும் பல விவசாயிகளின் சந்தைகள் ஆகியவை அடங்கும். DCF இன் இணையதளமான https://dcf.vermont.gov/benefits/ebtஇல் மேலும் அறிந்து கொள்ளுங்கள்.

---

**கேள்வி 14: எனக்குப் பள்ளியில் கல்வி கற்கும் குழந்தைகள் இல்லை. எனக்கு இந்தப் பலன் கிடைக்குமா?**
**பதில்:** இந்தப் பலன் தேசிய பள்ளி உணவுத் திட்டத்தின் மூலம் பள்ளியில் வழக்கமாக இலவச அல்லது விலை குறைக்கப்பட்ட உணவைப் பெற்று வந்து, COVID காரணமாக வராமலிருப்பதனால் அந்த உணவை வீட்டில் உண்ண வேண்டிய தேவையுள்ள குழந்தைகள் மற்றும் கேள்வி 16 இல் பட்டியலிடப்பட்டுள்ள தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற வீட்டில் இருந்து கல்வி கற்கும் மாணவர்களுக்கு மட்டுமே.

---

**கேள்வி 15: இது அரசுப் பள்ளியில் கல்வி கற்கும் குழந்தைகளுக்கு மட்டும் தானா?**
**பதில்:** இல்லை. சில தனியார் பள்ளிகள் தேசியப் பள்ளி மதிய உணவுத் திட்டத்தில் பங்கேற்கின்றன, அந்தப் பள்ளிகளில் கல்வி கற்கும் குழந்தைகள் இந்தப் பலனைப் பெறுவதற்குத் தகுதியுடையவர்களாக இருக்கலாம். ஆனாலும், பல தனியார் பள்ளிகள் தேசியப் பள்ளி மதிய உணவுத் திட்டத்தில் பங்கேற்கவில்லை, அவற்றின் மாணவர்கள் தகுதியுடையவர்கள் அல்ல.

---

**கேள்வி 16: எனது குழந்தை இந்த ஆண்டு வீட்டில் இருந்தே கல்வி கற்கிறது. நாங்கள் இந்தப் பலனுக்குத் தகுதியுடைவர்களா?**
**பதில்:** மத்திய அரசின் புதிய வழிகாட்டுதலுக்கேற்ப நீங்கள் இந்தக் கல்வி ஆண்டில் P-EBT பலனுக்குத் தகுதியடையலாம். இந்த ஆண்டு P-EBT

பலனுக்குப் பின்வரும் வீட்டில் இருந்து கல்வி கற்கும் மாணவர்கள் தகுதியுடையவர்களாக இருக்கலாம்:

- கல்வி ஆண்டு 2022-2023 இல் கல்வி முகமை மூலம் வீட்டில் இருந்து கல்வி கற்றலில் சேர்ந்துள்ள மாணவர்
- ஜனவரி 27, 2020 க்குப் பிறகு வீட்டில் இருந்து கல்வி கற்றலில் சேர்ந்துள்ள மாணவர் (ஜனவரி 27, 2020 க்கு முன்னர் வீட்டில் இருந்து கல்வி கற்றலில் சேர்ந்துள்ள மாணவர்கள் தகுதியுடையவர்கள் அல்ல)
- அவர்கள் வெர்மோன்ட்டிற்குப் புதியவர்கள் என்பதாலோ அல்லது அந்தக் குழந்தை மழலையர் பள்ளியில், முதல் வகுப்பில் அல்லது இரண்டாம் வகுப்பில் இருந்ததாலோ, ஜனவரி 2020 இல் இருந்து இதற்கு முன்னர் மாணவர் வெர்மோன்ட் பள்ளியில் நேரடியாகக் கலந்து கொள்ளவில்லை, COVID பற்றிய கவலைகளால் இந்தக் கல்வி ஆண்டில் அவர்களின் குழந்தை வீட்டில் இருந்து கல்வி கற்றது எனக் குறிப்பிடும் உறுதிமொழியை பெற்றோர் அல்லது பாதுகாவலர் பூர்த்தி செய்கிறார்கள் என்றால்

---

## கேள்வி 17: கல்வி முகமையின் மூலம் வீட்டில் இருந்து கல்வி கற்பதற்குச் சேர்ந்துள்ள குடும்பத்தினர் இந்தக் கல்வி ஆண்டில் P-EBT பலன்களைப் பெறுவதற்காக அவற்றுக்கு விண்ணப்பிக்க வேண்டுமா?

**பதில்:** இல்லை. வீட்டில் இருந்து கல்வி கற்பதற்கு P-EBT பலன்களை வழங்குவதற்கு, AOE மற்றும் DCF ஆகியவை கோப்பில் உள்ள வீட்டில் இருந்து கல்வி கற்பதற்கான சேர்க்கை விவரங்களைப் பயன்படுத்திக் கொள்ளும்.  ஏனென்றால், வெர்மோன்ட்டில் உள்ள அனைத்து அரசுப் பள்ளிகளும் விதி 2 மற்றும் CEP மூலம் இலவச உணவை வழங்கி வருகின்றன, கேள்வி 16 இல் பட்டியலிடப்பட்டுள்ள தேவைகளைப் பூர்த்தி செய்யும் அனைத்து வீட்டிலிருந்து கல்வி கற்கும் மாணவர்களும் இலவச மற்றும் விலை குறைக்கப்பட்ட பள்ளி உணவைப் பெறுவதற்கு அவர்கள் தகுதியுடைவர்கள் என்பதை நிரூபிக்க வேண்டிய தேவையின்றி இந்தப் பலனைப் பெற முடியும். AOE கோப்பில் உள்ள சேர்க்கை அல்லது தொடர்பு விவரங்கள் பற்றி ஏதேனும் கேள்விகள் இருந்தால் மற்றும் COVID பற்றிய கவலைகளால் இந்த ஆண்டு தங்கள் குழந்தை வீட்டில் இருந்து கல்வி கற்கிறது எனபதை உறுதிப்படுத்துவதற்குப் பூர்த்தி செய்ய வேண்டிய உறுதிமொழிகளை அந்தக் குடும்பத்தினர் பூர்த்தி செய்வதற்காக,

வீட்டில் இருந்து கல்வி கற்கும் குடும்பத்தினரை AOE தொடர்பு கொள்ளும்.

---

**கேள்வி 18: வீட்டில் இருந்து கல்வி கற்பதற்கான P-EBT பலன் எவ்வளவு?**
**பதில்:** AOE மூலம் வீட்டில் இருந்து கல்வி கற்பதற்குச் சேர்க்கப்பட்டுள்ள செப்டம்பர் முதல் ஜூன் வரை ஒவ்வொரு மாதத்திற்கும் மாதம் ஒன்றுக்கு வீட்டில் இருந்து கல்வி கற்பதற்கான பலன் $143.15 ஆகும். இந்தக் கல்வி ஆண்டின் போது மத்திய COVID-19 பொது சுகாதார அவசரநிலை முடிவடைந்து விட்டால், இந்தக் கல்வி ஆண்டில் P-EBT பலன்களை மத்திய அரசு நிறுத்தி விடும் என்பதைக் கவனத்தில் கொள்ளவும். அந்தச் சூழ்நிலையில், இறுதியாக P-EBT கிடைக்கும் மாதத்தைக் குறிப்பிடுவதற்கு, இந்த FAQ க்கள் புதுப்பிக்கப்படும்.

---

**கேள்வி 19: வீட்டில் இருந்து கல்வி கற்பதற்கான P-EBT பலன் எப்போது வழங்கப்படும்?**
**பதில்:** வீட்டில் இருந்து கல்வி கற்பதற்கான பலன் மே 2023 இல் மொத்தத் தொகையாக வழங்கப்படும், ஜூன் மாதத்திற்குள் மத்தியப் பொதுச் சுகாதார அவசரநிலை முடிவடையாவிட்டால்,அதில் செப்டம்பர் முதல் ஜூன் வரையிலான பலன்கள் அடங்கும். Iஅந்தச் சூழ்நிலையில், இறுதியாக P-EBT கிடைக்கும் மாதத்தைக் குறிப்பிடுவதற்கு இந்த FAQ க்கள் புதுப்பிக்கப்படும்.

---

**கேள்வி 20: பள்ளி மூடப்பட்டு இருக்கும் போது அல்லது எனது குழந்தை செல்லாமல் இருக்கும் போது, உணவைப் பெற எங்களை அழைத்துச் சென்றனர் அல்லது பள்ளி உணவை வீட்டிற்கு அனுப்பியது. P-EBT பலனைப் பெற்றால் அவ்வாறு செய்வதை நான் நிறுத்த வேண்டுமா? அதனால் நாங்கள் இந்தப் பலனுக்குத் தகுதிநீக்கம் செய்யப்படுவோமா?**
**பதில்:** இல்லை. தொலை தூரக் கற்றலுக்காக உணவைப் பெறுகின்ற மாணவர்கள் P-EBT பலனைப் பெறுவதற்கும் தகுதியுடையவர்களாக நீடிப்பார்கள். நீங்கள் அந்த உணவையும் பெற்றுக் கொண்டு, இந்தப் பலனுக்கும் தகுதி பெறலாம்.

---

**கேள்வி 21: எனது மற்ற குழந்தைகளைப் பள்ளியில் அல்லது வீட்டில் இருந்து கல்வி கற்பதற்கு சேர்க்கவில்லை. அவர்கள் இந்தப் பலனைப் பெறத் தகுதியுடையவர்களா?**
**பதில்:** இல்லை. இந்தப் பலன், வழக்கமாகத் தேசியப் பள்ளி மதிய உணவுத் திட்டத்தில் பங்கேற்கின்ற பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ள குழந்தைகள் அல்லது கேள்வி 16 இல் பட்டியலிடப்பட்டுள்ள தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற, AOE மூலம் வீட்டில் இருந்து கல்வி கற்பதற்குச் சேர்ந்துள்ள தகுதியுள்ள மாணவர்களுக்கு மட்டுமே

---

**கேள்வி 22: தேசியப் பள்ளி மதிய உணவுத் திட்டத்தில் பங்கேற்கும் ஒரு தனியார் பள்ளியில் எனது குழந்தை கல்வி கற்கிறது. இதற்கு முன்னர் எனது குழந்தை இலவச அல்லது விலை குறைக்கப்பட்ட உணவுக்குத் தகுதி பெறவில்லை, ஆனால் இப்போது எங்கள் சூழ்நிலை மாறியுள்ளது. எனக்கு P-EBT கிடைக்குமா?**
**பதில்:** உங்கள் பொருளாதார நிலை மாறியுள்ளது என்றால், விண்ணப்பிப்பதற்கு உங்களை நாங்கள் ஊக்குவிக்கிறோம்:

- **3SquaresVT** - ஒருவேளை நீங்கள் மாதாந்திரப் பலனைப் பெறுகிறீர்கள், உங்கள் குழந்தை பள்ளியில் இலவச உணவிற்குத் தகுதி பெறுகிறது மற்றும் P-EBT பலனைப் பெறலாம் என்றால். எவ்வாறு விண்ணப்பிப்பது என்பதை https://dcf.vermont.gov/benefits/3SquaresVT என்ற DCF இணையதளத்தில் காணுங்கள்.
- **இலவச அல்லது விலை குறைக்கப்பட்ட உணவு** – உங்கள் குழந்தையின் பள்ளி அல்லது கல்வி முகமையின் இணையதளம்: https://education.vermont.gov/இல் விண்ணப்பத்தைப் பெறு ங்கள் உங்கள் பள்ளியில் சமர்ப்பிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள், செப்டம்பர் 2022 வரை பலன்களைப் பெறுவதற்கு உங்கள் குடும்பத்தினரைத் தகுதியடையச் செய்யலாம்.

---

**கேள்வி 23: இந்தப் பலனை நான் விரும்பாவிட்டால் என்னவாகும்?**
**பதில்:** பங்கேற்பது தன்னார்வமானது. நீங்கள் பங்கேற்க வேண்டாம் என முடிவு செய்தால்:

- உங்கள் SquaresVT EBT அட்டையில் வழங்கப்படும் கூடுதல் பலன்களைப் பயன்படுத்த வேண்டாம். *அல்லது*

- உங்களுக்குப் பிரத்தியேகமாக வழங்கப்பட்ட P-EBT அட்டையின் காந்தப் பட்டையின் மீது வெட்டி, பாதுகாப்பான முறையில் அட்டையைக் கைவிடுவதன் மூலம் அதை அகற்றுங்கள். உங்கள் அட்டையை வேறு யாரிடமும் தரக் கூடாது.

---

**கேள்வி 24: P-EBT பலன்களைப் பயன்படுத்தாவிட்டால் அவை காலாவதியாகி விடுமா?**

**பதில்:** ஆம். 274 நாட்களுக்குள் அட்டையைப் பயன்படுத்தவில்லை என்றால், P-EBT பலன்கள் காலாவதியாகி விடும்.

---

**கேள்வி 25: என்னிடம் மேலும் கேள்விகள் உள்ளன.  நான் எங்கே மேலும் அறிந்து கொள்ளலாம்?**

**பதில்:** கூடுதல் விவரங்களுக்கு, https://dcf.vermont.gov/esd/P-EBT  க்குச் செல்லவும் அல்லது 1-800-479-6151, விருப்பம் 7 ஐ அழைக்கவும். இலவச அல்லது விலை குறைக்கப்பட்ட உணவிற்காக உங்கள் மாணவரின் தகுதியைப் பற்றிக் குறிப்பிட்ட கேள்விகள் இருந்தால் அல்லது குடும்பத் தலைவரின் பெயரை அல்லது அட்டையை வழங்குவதற்குப் பயன்படும் அஞ்சல் முகவரியை மாற்ற விரும்பினால், உங்கள் மாணவரின் பள்ளியைத் தொடர்பு கொள்ளவும்.